புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 09, 2023 • புரட்சி 23 • முழக்கம் 43 • விலை ரூ.3.00

## பேரா.ஜெயராமன் எழுதிய நூல்கள் வெளியீடு

# ஒரு மாநிலத்தின் முதல்வராவது தான் தமிழ்தேசியமா?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி




**பேராசிரியர் ஜெயராமன் எழுதிய தமிழ்த் தேசத்தின் எதிர் யார்? "தமிழ் இந்து : இந்துத்துவா இந்தியாவுக்கு இணக்கமான முன்னெடுப்பு" என்ற இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு அக்டோபர் 28,2023 அன்று மேடவாக்கம் பவலரேறு தமிழ்க்களத்தில் நிகழ்ந்தது. நூலை கழகத் தலைவர் வெளியிட்டார், தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பொழிலன் தலைமையில் நடைபெற்றது. நூலை வெளியிட்டு கழகத் தலைவர் உரை :**

நான் ஒரு பெரியார் இயக்கத்தவன் என்ற அடிப்படையில் பெரியாரின் மேற்கோள் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். தமிழன் தன்னை இந்தியன் என்று கருதியதால் தமிழ்நாட்டையும், தமிழர் வீரத்தையும், கலையையும், நாகரீகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை இந்து என்று கருதியதால் தனது மானத்தையும், ஞானத்தையும், பகுத்தறிவையும், உரிமையையும் இழந்தான் என்ற அடிப்படையில் தான் இந்த இரண்டு நூல்களையும் நான் பார்க்கிறேன். இந்த கருத்தை மறுக்கும் இருவருக்கு மறுப்பாகத்தான் இந்த இரண்டு நூல்கள் இருக்கும் என்று கருதுகிறேன்.

முதலில் தமிழ் தேசியம் என்ற சிந்தனையையே மாற்றி, ஒரு மாநிலத்தின் முதல்வராவது தான் தமிழ்தேசியம் என்பதான ஒரு சிந்தனைப் போக்கை உருவாக்கிவிட்டார்கள். அய்யா மணியரசன் புதியதாக ஒன்றை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக 'தமிழ் இந்து' என்ற ஒரு அடையாளத்தை நமக்களித்துள்ளார். இதில் என்ன ஆபத்துக்கள் இருக்கின்றன என்பதை பலரும் விளக்கி இருக்கிறார்கள்.

தமிழ்தேசியவாதி கையில் ஒரு திறன்பேசியும், 36 கெட்ட வார்த்தைகளும் தெரிந்தால் அவர் தமிழ் தேசியவாதி என்கிறார் பேராசிரியர் ஜெயராமன். 1940 களில் இருந்து பெரியார் சுயநிர்ணய உரிமை குறித்து பேசுகிறார். இஸ்லாமியர்கள் தனிநாடு கேட்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, மதத்தின் பெயரால் கொச்சைப்படுத்தாதீர், அவர்கள் தங்களுக்குள் உள்ள சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்காக கேட்கிறார்கள். அதேபோலத்தான் எங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு, எங்களுக்கும் தனிநாடு வேண்டும் என்று 1940ல் பெரியார் சொல்கிறார்.

1940ம் ஆண்டிலேயே 'சுயநிர்ணயம் கேட்பது ஆக்கிரமிப்பா?' என்று தலையங்கம் எழுதினார். சாவர்க்கர் தனது 60ம் ஆண்டு விழாவில் பேசியதற்கு பதில் எழுதுகிறார். இந்தியா எப்போதும் இந்தியாவாகத்தான் இருந்ததா? 1938ல் பர்மா, இலங்கை ஆகியவை பிரிந்து விட்டது, இந்தியன் என்றால் ஆப்கானிஸ்தானை சேர்ந்த இந்தியனா? பர்மாவை சேர்ந்த இந்தியனா? நீ பிரிந்து போன இந்தியாவில் ஒருவன் என்று தானே சொல்லிக் கொள்ள முடியும் என்றெல்லாம் விவாதிக்கிறார்.

அ ர சி ய ல் ரீ தி ய ா க திராவிட இயக்கத்தின் தொடக்கப்புள்ளியாக இருக்கிற தென்னிந்திய நலச் சங்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான டி.எம்.நாயர், ஜஸ்டிஸ் ஏட்டில் ஒரு தலையங்கம் எழுதுகிறார். எங்களுடைய நான்கு சகோதர இனங்கள் மொழியின் அடிப்படையில் நாடுகளாக அமைத்து ஒரு கூட்டாட்சியாக வேண்டும் என்ற நோக்கத்திற்காக தொடங்கப்பட்டது என்று 1917, நவம்பரில் ஜஸ்டிஸ் ஏட்டில் தலையங்கமாக எழுதுகிறார்.

நீங்கள் திராவிடர் கழகம் என்று பெயர் வைக்காவிட்டால் வேறு என்ன பெயர் வைத்திருப்பீர்கள் என்று பெரியாரிடம் கேட்ட போது, சூத்திரர் கழகம் என்று வைத்திருப்பேன் என்று பதிலளித்தார். நான் திராவிடர் என்று சொல்வது சூத்திரர்களுக்கான சொல், உரிமை மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட இனத்தவரின் கூட்டம் இது. எனக்கு வேறொரு சொல் கிடைக்கவில்லை, அதனால் இந்த சொல்லை வைத்துக் கொண்டேன் என்றும் ஒருமுறை சொல்லியிருக்கிறார். இதில் சூத்திரர்களை தவிர ஒரு துரும்பு கூட உள்ளே நுழையக்கூடாது என்று கூறிவிட்டு சொன்னார், அப்படி ஏதாவது பெயர் இருந்தால் சொல்லுங்கள் எனது அறியாமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு எங்கள் அமைப்புக்கு அந்த பெயரை வைக்க தயாராக இருக்கிறேன் என்றார். ஆனால் நம்முடைய இன எதிரியான அல்லது கலாச்சார எதிரியான ஆரியர்கள், ஆரியத் தத்துவங்கள் உள்ளே வந்துவிடக்கூடாது, அதற்கு ஒரு சொல்லை சொல்லுங்கள் என்றுதான் பெரியார் சொன்னார்.

ஆனால் அதை முன்னெடுத்துச் செல்வதற்கான முன்னெடுப்புகள் போதிய வேகத்தில் இருக்கிறதா என்றால் அது கேள்விக்குறி தான். ஆனாலும் அதை அடுத்த தலைமுறைக்கு கனலாக கையளிக்க வேண்டியதை கூட சிதைக்கும் போக்கு கொண்ட இருவர்களை பற்றியவை தான் இந்த நூல்கள்.

ஒருகாலத்தில் தமிழர்களுக்கு என்பது தமிழ்ப் பண்புள்ள மக்களின் உரிய பெயராக இருந்திருந்தாலும், இன்று மொழிப் பெயராகவே மாறிவிட்டதாலும், அந்த மொழிப் பேசும் ஆரிய பண்புள்ள மக்கள் யாவரும் தாமும் தமிழர் என்று உரிமை பாராட்ட முன்வந்து விடுகிறார்கள். அதோடு ஆரிய பண்பை நம்மீது சுமத்த இந்த சேர்க்கையை பயன்படுத்திவிடுகிறார்கள். எனவே அந்த திராவிடன் என்ற சொல்லை கையாண்டேன் என்று சொல்கிறார். இதுதான் திராவிடன் என்று பெயர் சூட்டியதற்காக பெரியார் தந்த விளக்கம்.

1926ல் அர்ச்சகர் உரிமை வேண்டும், கோயில் நுழைவு, பூஜை, பிரவேசம், தொழுகை உள்ளிட்டவைக்கு இந்துக்கள் என்று சொல்லப்படும் சகல சமூகத்தவருக்கும் உரிமை வேண்டும் என்று தீர்மானம் இயற்றுகிறார். இறுதிவரை அந்த கோரிக்கையில் உறுதியாக இருந்தார், இறுதி மாநாட்டில் அறிவித்த கோரிக்கையும் அதுதான். ஆரியர்கள் தாங்கள் இழந்துவிட்ட பெருமையை மீண்டும் பெறுவதற்காக நடத்தப்படுவது தான் விடுதலைப் போராட்டம் என்பது பெரியாரின் கருத்து. ஆங்கிலேயர்கள் உள்ளே நுழைந்து மற்றவர்களை கேவலப்படுத்துகிற, அடிமைப்படுத்துகிற தத்துவங்களை எல்லாம் உடைத்தெறிந்து, பெண்களை அடிமையாக வைத்திருப்பதற்கு சாதகமாக இருக்கும் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து அதற்கு மாற்றான சட்டங்களை கொண்டுவருகிற இந்த ஆங்கிலேயர்களை தொடர்ந்து விட்டால் நமது இந்து பண்பாடே அழிந்து விடும் என்பது தான் ஆரியர்களின் நோக்கம்.

1931ல் காந்தி - இர்வின் ஒப்பந்தம் போடப்படுகிறது. அப்போது லண்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் சர்ச்சில் பேசுகிறார். "எல்லா நாட்டிற்கும் சுதந்திரத்தை கொடுங்கள், ஆனால் இந்தியாவிற்கு மட்டும் சுதந்திரத்தை கொடுக்காதீர்கள் என்று சர்ச்சில் பேசினார். அப்படி அவர் பேசியதற்கு காரணம் "இந்த நாட்டின் விடுதலைக்காக போராடுகிற காந்தியின் திட்டம் ஆங்கிலேயர் என்ற இடத்தில் பிராமணர்களை உட்கார வைப்பது மட்டும் தான். அவர்கள் மீண்டும் வந்துவிட்டால் 60 மில்லியன் தாழ்த்தப்பட்ட மக்கள் அழிந்தே போய்விடுவார்கள்" என்று பேசினார். இந்திய தேசியத்திற்கு எதிராக பெரியார் பேசியதை இவர்கள் தமிழ் தேசியத்திற்கு எதிராக பேசியது போல் காட்டுகிறார்கள்.

அய்யா மணியரசன் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஒருமுறை ஒரு நிகழ்ச்சியில் பேசுகிற போது சொன்னேன். உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் என்று ஔவையார் சொல்கிறாரே, ஒன்று மேலாடையாக நான்கு முழம் அல்லது கீழே கட்டியிருப்பது நான்கு முழம் தானே என்று ஒரு இடத்தில் சொன்னேன். உடனே அய்யா மணியரசன், மதுரை கணக்காயர் மகன் நக்கீரனார் எழுதியிருக்கிறார். உண்பது நாழி உடுப்பது இரண்டு என்று தான் உள்ளது கொளத்தூர் மணி மாற்றிப் பேசுகிறார் என்று எழுதினார். நான் மீண்டும் அவருக்கும், அவரது இதழுக்கும், அவரது இணையதளத்திற்கும் எழுதினேன். நான் ஔவையார் பற்றி சொன்னேன், நீங்கள் நக்கீரனாரை பற்றி சொல்கிறீர்கள், நான் கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள் என்றவுடன் அமைதியாகிவிட்டார். பிறகு மூன்றாண்டுகள் கழித்து மீண்டும் எழுதுகிறார். ஒருவர் தன்னுணர்வு கொண்டவராக இருந்தால் தவறு என்று சுட்டிக் காட்டினால் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வேண்டும்.

(அடுத்த இதழில் நிறைவடையும்)

**தலையங்கம்**

# அதிகார வரம்பை மீறும் ஆளுநர்கள்

ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் கருத்து தெரிவித்துள்ளார். பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் தொல்லைகளை உருவாக்கி அரசியல் சட்டத்தையே முடக்கும் ‘திருப்பணிகளை’ ஆளுநர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு, பஞ்சாப், கேரளா மாநில ஆட்சிகள் இப்பிரச்சனையை உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றுள்ளன.

பஞ்சாப்பில் முதல்வர் பகவந்த் சிங் மான் தலைமையில் ஆம்ஆத்மி கட்சியின் ஆட்சி நடக்கிறது. அம்மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித் கிடப்பில் போட்டு வைத்துள்ளார். இந்த வழக்கு விசாரணையின் போதுதான் தலைமை நீதிபதி இந்த கருத்தை தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் பட்ஜெட் கூட்டத் தொடரை கூட்டுவதற்கு ஆளுநர் அனுமதி மறுத்தார். அப்போதே பஞ்சாப் மாநில ஆட்சி ஆளுநருக்கு இந்த அதிகாரம் இல்லை என்று கூறி உச்சநீதிமன்றம் சென்றது. வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தீர்ப்பு கூறியது. சட்ட ஆலோசனைகளை பெற்ற பின்பே அனுமதி தருவேன் என்று ஆளுநர் எடுத்த நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. விசாரணை நடக்கும் போதே ஆளுநர் தரப்பில் வாதிட்ட ஒன்றிய அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா ஏற்கனவே சட்டசபை கூட்டுவதற்கு ஆளுநர் அனுமதி வழங்கிவிட்டார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார், ஆக ஆளுநரின் செயல்பாடு சட்டவிரோதமான செயல்பாடு என்று தெரிந்தும் செயல்பட்டிருக்கிறார் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

டெல்லியில் கெஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அதிகாரத்தில் உள்ளது. ஆனாலும் காவல்துறை ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு முழுமையான நிர்வாக உரிமை உண்டு என்று முதல்வர் கெஜ்ரிவால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். ஐந்து பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு டெல்லி யூனியன் பிரதேசத்திற்கே அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளித்தது. “ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதன் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் உரிமை இல்லை என்றால் அந்த அரசுக்கு சட்டமன்றம் மற்றும் பொதுமக்கள் மீதான பொறுப்புகளை நீர்த்துப் போக செய்துவிடும். ஆனாலும் நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு சட்டத்திருத்தம் கொண்டுவந்து ஒன்றிய பாஜக ஆட்சி மீண்டும் உரிமைகளை பறித்துக் கொண்டது.

ஆளுநர்களின் அத்துமீறல்களுக்கு மற்றொரு உதாரணம் மேற்கு வங்காளத்தில் நடந்த சம்பவம். மம்தா பானர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு தொடர்ந்து நெருக்கடிகளை உருவாக்கி வந்தார் அம்மாநில ஆளுநர் ஜெகதீஸ் தன்கர். மாநில சட்டமன்றத்தை கூட்டி ஆளுநருக்கு எதிராக கண்டன தீர்மானத்தை மம்தா கொண்டுவரப் போகிறார் என்பதை உணர்ந்த அவர் 174வது பிரிவை பயன்படுத்தி சட்டசபையை முடக்கினார். இதற்கு பதிலடியாக டிவிட்டரில் ஆளுநரை பிளாக் செய்தார் மம்தா. இப்போது ஜெகதீஸ் தன்கர் குடியரசு துணைத் தலைவர்.

புதுவையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் நாராயணசாமி முதல்வராக இருந்த போது ஆளுநர் கிரண் பேடி ஆட்சி நிர்வாகத்தில் எல்லைமீறி தலையிட்டு நெருக்கடிகளை உருவாக்கினார். இப்போது பாஜக கூட்டணி ஆட்சி நடக்கும் புதுவையில் பாஜகவின் ஊது குழலான தமிழிசை ஆளுநர், இதனால் அந்த மாநிலத்தில் எந்த பிரச்சனையும் இல்லை. பிறகு தெலுங்கானா மாநிலத்தின் ஆளுநர் பதவியும் கூடுதலாக தமிழிசைக்கு வழங்கப்பட்டது. பாஜக அல்லாத பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சியின் முதல்வர் சந்திரசேகர ராவ் ஆட்சிக்கு நெருக்கடிகள் தொடங்கின. ஆளுநரே மக்கள் குறை தீற்கும் கூட்டங்களை கூட்டினார். ஒரு கட்டத்தில் ஆளுநரையே புறக்கணித்து சட்டசபையை கூட்டினார் சந்திரசேகர ராவ்.

கேரளாவிலும் இதே மோதல் தான். ஆரிஃப் முகமது கான் அம்மாநில ஆளுநர். அம்மாநிலத்தின் 13 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநரின் அதிகாரத்தைக் குறைக்கும் மசோதாவுக்கு ஆளுநர் கையெழுத்திட மறுத்தார். துணை வேந்தர்களை தேர்வு செய்யும் செனட் குழு கூட்டத்தில் தனது ஆணையை ஏற்க மறுத்த 15 உறுப்பினர்களை ஆளுநர் பதவி நீக்கம் செய்தார்.

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி சட்டமன்றத்தில் அரசு தயாரித்த உரையை படிக்காமல் பல பகுதிகளை நீக்கினார். அவரே சில பகுதிகளை சேர்த்துக் கொண்டார். ஆளுநர் சேர்த்துக் கொண்ட பகுதிகளை அவைக் குறிப்பில் இருந்து அவைத் தலைவர் நீக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநர் முன்னிலையிலே தீர்மானம் கொண்டுவந்தார். ஆத்திரமடைந்த ஆளுநர் அவையை விட்டே வெளியேறினார். தமிழ்நாடு அரசின் 13 மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் முடக்கி வைத்துள்ளார். ஆன்லைன் சூதாட்ட தடுப்பு மசோதாவுக்கு ஒப்புதல் தராமல் சூதாட்டம் நடத்தும் உரிமையாளர்களை ஆளுநர் மாளிகைக்கு அழைத்துப் பேசினார். ஆளுநரின் முறைகேட்டை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்த அடுத்த சில மணிநேரத்திலேயே ஆளுநர் ஆன்லைன் தடை மசோதாவுக்கு ஒப்புதல் தந்தார். தன்னை தமிழ்நாட்டின் தலைவராகக் கருதிக் கொண்டு ஒவ்வொரு நாளும் வகுப்பெடுத்துக் கொண்டு தனது அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இப்போது பாஜக ஆட்சி செய்யாத மாநில ஆட்சிகள் உச்சநீதிமன்றத்தின் கதவை தட்டியுள்ளன. ஆளுநர் மக்கள் பிரதிநிதிகள் அல்ல என்று தலைமை நீதிபதிகள் கூறியிருப்பதும் ஏற்கனவே இது தொடர்பான வழக்குகளில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளும் ஆளுநர்களின் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு!

# சனாதனத்தை காப்பாற்ற காவல்துறையே புறப்படு!

*கடவுள், சாஸ்திரம், சடங்குகளைக் காப்பாற்றக் கூட இப்போது காவல்துறைதான் தேவைப்படுகிறது.’இவர் கடவுளை விமர்சித்து விட்டார்; காவல்துறையே நடவடிக்கை எடு என்று புகார் மனுக்களை தூக்கிக் கொண்டு காவல்துறையிடம் போகிறார்கள். மதத்தை புண்படுத்தியவரை கைது செய்ய வேண்டும் என்று வீதிகளில் போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் இவர்கள் கடவுளிடம் போய் முறையிடுவதில்லை.*

*‘பகவானே, உன்னை புண்படுத்துகிறவர்களை நீ தண்டிக்க வேண்டாமா? அல்லது இப்படி எல்லாம் பேசாமல் இருப்பதற்கு உனது சக்தியை பயன்படுத்த மாட்டாயா? என்று ஏன் முறையிடுவதில்லை! அதற்காக சிறப்பு அர்ச்சனை, யாகம் நடத்தி தங்கள் வேத சக்தியை ஏன் ஏவிவிடக் கூடாது? இதைக் கேட்டால் அப்போதும் நம்மீது புகார் கொடுக்க காவல்துறையிடம் ஓடுகிறார்கள்.*

*கடவுள் மீதெல்லாம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை, புராணங்களில் கடவுள்கள் அவதாரம் எடுத்துவந்து எதிரிகளை சம்ஹாரம் செய்ததாக கூறுகிறார்கள். இப்போது கூட ‘சூர சம்ஹாரம்’ திருவிழாவாக நடக்கிறது. நாடுகள் உருவான பிறகு எந்த கடவுளும் தங்களை எதிர்த்தவர்களை அழிக்க அவதாரம் எடுப்பதே இல்லை. ஏன் என்று கேட்டால் கடவுள் நிந்தனை என்று மீண்டும் காவல்துறைக்கு ஓடுகிறார்கள்.*

*கடவுள் பெரிதா? காவல்துறை பெரிதா? என்று ஒரு பட்டிமன்றம் நடத்தினால் அதற்குக்கூட காவல்துறை அனுமதியும் பாதுகாப்பும் தேவைப்படுகிற காலம் இது.*

*சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர்பாபு மீது அப்போதே காவல்துறை நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், எடுக்காதது தவறு என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அதற்கு உதயநிதி ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.*

*“நான் சனாதன எதிர்ப்பு கருத்தில் இருந்து பின்வாங்க மாட்டேன். பதவிகள் வரும், பின்னர் போய்விடும். அது முக்கியமல்ல, மனிதனாக இருப்பதுதான் முக்கியம். சட்ட நடவடிக்கைகள் வருமென்றால் அதை சந்திக்கத் தயார்” என்று கூறிவிட்டார்.*

*பெரியாரும் அம்பேத்கரும் பேசிய சனாதன எதிர்ப்பையே நானும் பேசுகிறேன், அண்ணன் திருமாவளவனும் அதையே பேசுகிறார் என்று உதயநிதி சுட்டிக்காட்டுகிறார். அண்மைக் காலமாக தமிழக வரலாற்றில் இலட்சியப் பிடிப்புள்ள வெகுசில தலைவர்களில் உதயநிதியும் இடம் பிடித்துவிட்டார். உதயநிதிக்கு ஒரு ’சல்யூட்’ இந்த பதிலில் ஒரு அர்த்தமுள்ள கேள்வியும் அடங்கியிருக்கிறது. பெரியார், அம்பேத்கரின் சனாதன எதிர்ப்பு கருத்துகளை பேசினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறுமா? என்பதுதான் அந்த கேள்வி.*

*ஒரு அமைச்சர் மனிதனாக இருப்பேன் என்றெல்லாம் பேசலாமா? இது சனாதனத்துக்கு அவமானம், தேச ஒற்றுமையை சிதைக்கும் நச்சுக் கருத்து. மனிதன் மனிதனாக இருக்க வேண்டும் என்று கூறுவது எங்கள் மதத்தையே இழிவுபடுத்துவதாகும் என்று ஒரு ‘புண்பட்ட’ மனிதர் வழக்குத் தொடர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்போது நீதிமன்றம் என்ன தீர்ப்பை கூறுமோ தெரியாது. சனாதனத்தைக் காப்பாற்ற காவல்துறை நீதிமன்றங்கள் இருக்கின்றன, மனிதத்தை காப்பாற்றத்தான் இங்கே யாரும் இல்லை.*

**கோடங்குடி மாரிமுத்து**

# தர்மபுரியில் 29 தெருமுனைக் கூட்டங்கள்



தர்மபுரி : எது சனாதனம்? எது திராவிடம்? என்ற தலைப்பில் தர்மபுரி மாவட்டம் முழுவதும் 29 தெருமுனைக் கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி அதன் நிறைவு பொதுக்கூட்டம் 26.10.2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு சிகரல அள்ளியில் மாவட்டத் தலைவர் வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் முன்னிலை வகித்தார்.

கூட்டத் தொடக்கமாக மேட்டூர் டி.கே.ஆர் பகுத்தறிவு இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி. நடைபெற்றது. தொடர்ந்து சந்தோஷ்குமார் - அருண்குமார் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் அசோகன், மக்கள் அதிகாரம் கோபிநாத், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சேட்டு, ஆதித்தமிழர் பேரவை சரவணன், சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

சுதந்திர குமார் நன்றி கூறினார்.

## மோடி ஆட்சி இஸ்ரேலை ஆதரிப்பது ஏன்? (2)

# ஹிட்லர் - முசோலினியை ஆதரித்த ஆர்.எஸ்.எஸ்

விடுதலை இராசேந்திரன்

ஜியோனிசம் பேசிய யூதர்கள், இஸ்லாமியர்கள் ஆண்டு கொண்டிருந்த பாலஸ்தீன நாட்டில் உள்ள நிலங்களை உலகம் முழுவதிலும் உள்ள யூதர்கள் பெரும் தொகை கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி பிறகு சட்ட விரோதமாக தங்களுக்கென்று "இஸ்ரேல்" என்ற நாட்டை உருவாக்கிக் கொண்டார்கள்.

ஹிட்லர், யூதர்களை வெறுக்கும் கொள்கையைக் கொண்டிருந்தார். எனவே இஸ்லாமியர்களை வெறுக்கும் ஜியோனிச கொள்கையைக் கொண்ட நாடாக மாறியது. இஸ்ரேல் பார்ப்பனியம் ஜியோனிசத்தோடும் கைகோர்த்து நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு திட்டமிட்டு அதற்கான முயற்சிகளை பார்ப்பனியம் தொடங்கியது.

யூதர்கள் பேசிய இனப் பெருமையை ஹிட்லர் பேசிய இனப் பெருமையை முசோலினி போற்றிய இனவெறி இராணுவக் கட்டமைப்பை அப்படியே பார்ப்பனியமும் பேசுகிறது.

"மனித சமூகம் தழைக்க வேண்டும் என்பதற்காகவே வந்த ஆரியர்களாகிய நமக்கு, தொடக்கம் என்ற ஒன்றே கிடையாது. நமது இனம் எப்போது தோன்றியது என்பதை வரலாற்று ஆசிரியர்களாலேயே கண்டறிய முடியவில்லை. நம்மைத் தவிர மற்றவர்கள் இரண்டு கால் பிராணிகள்; அறிவற்றவர்கள்; மிலேச்சர்கள்; அவர்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தும் அடையாளமே ஆரியர்" என்று ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் எழுதி வைத்துள்ளார். (நூல்: Bunch of thoughts)

சொல்லப்போனால் பாசிசம் உருவாவதற்கு முன்பே வேதகாலத்தில் இதைவிட கொடூரமான 'பார்ப்பனியம்' என்ற சித்தாந்தத்தை வேத கால பார்ப்பனர்கள் இந்த சமூகத்தில் உருவாக்கிக் கொண்டுவிட்டார்கள்.

தங்களுக்கென்று ஒரு நாடு இல்லாவிட்டாலும் எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டினுடைய சமுதாய விதிகளை, சமுதாய கொள்கைகளை சமூக அமைப்பை நாங்கள் தான் நிர்வாகிப்போம், எங்களுக்கு அடிமைப்பட்டு நாங்கள் கூறுகிற வர்ணாஸ்ரம தர்மத்தின் கீழ் தான் ஒவ்வொரு பிரிவினரும் வாழ வேண்டும் என்று கூறி அதை மீறுகிறவர்களுக்கு சாஸ்திரப்படி என்ன தண்டனை என்றுவரையறுத்து,இவைகடவுளால்படைக்கப்பட்ட கட்டளைகள் என்று மக்களை அச்சுறுத்தி இந்த கட்டளைகளை மீறுவதற்கு என்ன தண்டனை என்பதற்கு மனுசாஸ்திரங்களை உருவாக்கி நாட்டை ஆண்டு கொண்டிருந்த மன்னர்களை தங்கள் வசப்படுத்திக் கொண்டு தங்களுடைய பார்ப்பனிய சித்தாந்தத்தை அரசுகளின் வழியாக அதிகாரத்தின் வழியாக தாங்கள் பதவிக்கு போகாமலே அடக்கி ஒடுக்குகின்ற ஒரு மோசமான கொடூரமான அமைப்பை பாசிசத்திற்கு முன்பே இந்த நாட்டில் உருவாக்கியது பார்ப்பனியம். பார்ப்பனியம் என்பது பாசிசத்தின் தாய். (Mother of fascism is Brahmanism) இத்தாலிய ஆய்வாளரான மார்சிய கேசலோரி - டெல்லி தேசிய ஆவணக் காப்பகத்திலும், ரோம் நகரத்திலும் அவர் தேடி சேகரித்த தகவல்களை கட்டுரையாக வெளியிட்டார். In The Shadow Of Swastika என்ற பெயரில் வெளிவந்த கட்டுரையில் இருந்து சில பகுதிகள்

1931இல் லண்டனில் நடந்த வட்ட மேசை மாநாட்டுக்குப் பிறகு ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் விஜயம் செய்த மூஞ்சே ஃபாசிசக் கருத்தியலால் ஈர்க்கப்பட்டார். மூஞ்சே இந்து மகா சபை தலைவர்களில் ஒருவர், ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தொடங்கியதிலும் முக்கியபங்காற்றியவர். அது குறித்து அவரது நாட்குறிப்பேட்டில் மூஞ்சே இப்படி எழுதுகிறார்.

"மக்களிடையே ஒற்றுமை என்கிற கருத்தை வெளிப்படுத்துகிறது ஃபாசிசம். இந்துக்களை இராணுவ ரீதியாக மீளுருவாக்கம் செய்வதற்கு இந்தியாவிற்கு, குறிப்பாக இந்து இந்தியாவிற்கு, அது போன்ற ஒரு நிறுவனம் தேவைப்படுகிறது. இதனால் இந்துக்களுக்கிடையே போர்த் திறமுள்ள இனங்கள், போர்த் திறமில்லா இனங்கள் என்று பிரிட்டிஷார் வலியுறுத்திக் கூறும் செயற்கையான பிரிவினைகள் மறைந்துவிடும். டாக்டர் ஹெட்கேவாரின் தலைமையில் நாக்பூரில் செயல்படும் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங் தனியாகத் தொடங்கப்பட்டதென்றாலும் இந்த வகையை சேர்ந்ததுதான். ஹெட்கேவாரின் இந்த நிறுவனத்தை வளர்த்து மகாராஷ்டிராவிலும், பிற மாகாணங்களிலும் விரிவடையச் செய்யும் பணியில் மீதமிருக்கும் வாழ்நாளையும் கழிப்பேன்"

மூஞ்சேயைக் கவர்ந்தது ஃபாசிச தத்துவம் மட்டுமல்ல; அதன் அடிப்படையில் அமைந்த ராணுவ அமைப்பும் தான். அவர் மேலும் எழுதுகிறார்.

"பலில்லா நிறுவனங்கள் இன்னும் முழுமையாக கட்டுப்பாடுள்ளதாகவும், மிகச்சிறந்த ஃபாசிசத்தின் அமைப்புகளாகவும் உருவெடுக்கவில்லையெனில் அவற்றை உருவாக்குவதற்குப் பின்னிருந்த சிந்தனை என்னை வெகுவாக ஈர்த்தது. இத்தாலியை ராணுவரீதியில் மீளுருவாக்கம் செய்வது என்கிற முசோலினியின் சிந்தனையில் இருந்துதான் பலில்லா பிறந்தது. பொதுவாக இந்தியர்களைப் போலவே இத்தாலியர்களும் சிரமமில்லா வாழ்க்கையை நேசிப்பவர்களாகவும் போர்த்திறமில்லாதவர்களாகவும் இருந்தது போல் தெரிகிறது. இந்தியர்களைப் போலவே இத்தாலியர்களும் அமைதியான பணிகளைச் செய்யும் வழக்கத்தை வளர்த்துக் கொண்டு போர்க்கலையை பயில்வதில் கவனம் செலுத்துவதில்லை. தன் நாட்டின் இந்த அடிப்படையான பலவீனத்தை உணர்ந்த முசோலினி பலில்லா என்கிற அமைப்பை உருவாக்க முடிவு செய்தார்"

மூஞ்சே மார்ச் 19,1931 அன்று முசோலினியை சந்தித்தார். அப்போது அவர் முசோலினியிடம் கூறியது இதுதான்.

"இது போன்ற நோக்கங்களைக் கொண்ட ஒரு அமைப்பை நான் ஏற்கனவே இந்தியாவில் தொடங்கிவிட்டேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் பொது மேடைகளில் உங்களுடைய பலில்லா போன்ற ஃபாசிஸ்ட் அமைப்புகளைப் புகழ்ந்து பேச தயங்கமாட்டேன். அவற்றுக்கு அதிர்ஷ்டம் உண்டாகட்டும் என்றும், அவை எல்லா வெற்றிகளையும் பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்."

இந்து தேசத்தின் தீவிரவாத கிளையாகத்தான் ஆர்.எஸ்.எஸ் அமைக்கப்பட்டது. மூஞ்சேயை பொருத்தவரையில், முசோலினி ஐரோப்பிய உலகத்தின் சிறந்த மனிதர்களுள் ஒருவர்.

மூஞ்சே இந்தியாவிற்குத் திரும்பியவுடன் ஆர்.எஸ்.எஸுடன் தொடர்புடைய ஒரு ராணுவ பயிற்சிப் பள்ளியைத் தொடங்கி சங் அமைப்பை வலுப்படுத்தினார். அவர்தான் ஆர்.எஸ்.எஸுக்கும் இந்து மகா சபைக்கும் இணைப்பாக இருந்தார். ஹெட்கேவார் அவருடைய சீடர்; ஆனால் ஆர்.எஸ்.எஸ் இந்த உண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. 1927இல் இந்து மகா சபை தலைவரான மூஞ்சே அஹமதாபாத்தில் நடந்த அதன் மாநாட்டுக்கு ஆர்.எஸ்.எஸுக்கு அழைப்பு விடுத்தார். அங்கு ஹெட்கேவார் மகா சபையின் தலைவர்களை சந்திக்க முடிந்தது, அவர் 1926 முதல் 1931 வரை மகா சபையின் செயலாளராக இருந்தார். மார்ச் 31,1934 அன்று ஹெட்கேவரையும், மகாசபைத் தலைவர் லாலு கோகலேயையும் சந்தித்த மூஞ்சே இவ்வாறு சொன்னார்.

"இந்து மதத்தை இந்தியா முழுவதும் ஒரே தரப்படுத்தும் வகையில் இந்து தர்ம சாஸ்திரத்தின் அடிப்படையிலான ஒரு திட்டத்தை நான் வகுத்திருக்கிறென். ஆனால் பழைய சிவாஜி அல்லது தற்கால ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் தலைவர்களான ஹிட்லர், முசோலினியைப் போன்ற ஒரு சர்வாதிகாரியின் ஆட்சியின் கீழ் வரும் நமக்கான ஓர் இந்து சுயராஜ்ஜியம் இல்லையென்றால் இந்த திட்டத்தை செயல்படுத்த முடியாது, ஆனால் அது போன்ற ஒரு சர்வாதிகாரி இந்தியாவில் எழும் வரை நம் கைகளை கட்டிக் கொண்டு அமர்ந்திருக்க வேண்டும் என்று இதற்கு அர்த்தமல்ல. அந்த நோக்கத்தை அடைவதற்காக அறிவியல் பூர்வமான திட்டத்தை வகுத்து பிரச்சாரம் செய்ய வேண்டும்."

1934இல் போன்சாலா ராணுவ பள்ளியும், மத்திய இந்து ராணுவ கல்வி சொசைட்டியும் தோற்றுவிக்கப்பட்டன. "இந்துக்களை ராணுவரீதியாக மீளுருவாக்கம் செய்து தாய் நாட்டைக் காக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள தகுதியானவர்களாக இந்து இளைஞர்களை ஆயத்தம் செய்வதே" அதன் நோக்கங்கள். முஸ்லிம், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள், பார்சிகள் போன்றோருக்கு இதில் இடமில்லை.

காஷ்மீர், இந்தூர், திருவிதாங்கூர், பிகானிர், உதய்பூர், ஜெய்பூர் போன்ற பிரதேசங்களை ஆண்ட மன்னர்களின் உதவியையும் மூஞ்சே பெற்றார். "இத்தாலிக்கு ஃபாசிஸ்டுகள் எப்படியோ, ஜெர்மனிக்கு நாசிக்கள் எப்படியோ, அப்படி இந்தியாவிற்கு ஆர்.எஸ்.எஸ் என்றாக வேண்டும் என்றுதான் ஆர்.எஸ்.எஸ் நம்புகிறது." என்று 1933இல் உளவுத்துறையின் அறிக்கை எச்சரித்தது. சாவர்க்கரும் இந்த நிலைப்பாட்டில் இருந்தார். ஆதாரம் : ஏ.ஜி.நூரானி எழுதிய ஆர்.எஸ்.எஸ் நூல்.

மூஞ்சே, முசோலினியை சந்தித்தது போலவே மற்றொரு வரலாற்று நிகழ்வும் நடந்தது. இஸ்ரேல் நாடு உருவானதை உலகத்தில் எந்த நாடும் அங்கீகரிக்க வில்லை. அது சட்ட விரோதமாக உருவாக்கப்பட்ட நாடு. அய்க்கிய நாடுகள் சபையும் அங்கீகரிக்கவே இல்லை. இந்தியாவும் நீண்ட நெடுங்காலமாக அங்கீகரிக்கவில்லை; தூதரக உறவும் இல்லை. இந்தப் பின்னணியில் 1977ஆம் ஆண்டு இந்தியாவில் மொராஜி தேசாய் ஆட்சியில் ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்தது.

அப்போது அந்த அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் வாஜ்பாய். வாஜ்பாயும் மொரார்ஜிதேசாயும் சேர்ந்து கொண்டு இந்தியா அங்கீகரிக்காத, இந்தியாவில் தூதரகம் துவங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்த இஸ்ரேல் நாட்டினுடைய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த 'மோஷி தயான்' என்பவரை சந்திப்பதற்கு இரகசியமாக திட்டமிட்டார்கள்.

இந்தியா அங்கீகரிக்காத நாடு ; ஆனால் அந்த நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவிற்கு வருகிறார். அவர் வருவது என்பதே சட்டவிரோதம். அவர் வேறு ஒரு பெயரில் போலியான 'கடவுச் சீட்டை' (பாஸ்போர்ட்) எடுத்துக்கொண்டு இந்தியாவிற்கு, ஒரு பயணிகள் விமானத்தில் மும்பையில் வந்து இறங்கினார்.

அப்போது இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த வாஜ்பாய், போலி பாஸ்போர்ட், போலிப் பெயருடன் இந்தியா அங்கீகரிக்காத நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரை மும்பையில் அரசாங்கத்தின் விமானப் படையை அனுப்பி வரவேற்றார்கள். அவரை வாஜ்பாயும் மொரார்ஜி தேசாயும் மூன்று முறை சந்தித்துப் பேசி 'நீங்கள் இஸ்லாமிய வெறுப்பில் தீவிரமாக இருக்கும் காரணத்தினால், இஸ்ரேலுக்கு எதிர்காலத்தில் நாங்கள் ஆதரவைக் கொடுப்போம்' என்ற உறுதியை அந்த சந்திப்பில் வெளிப்படுத்தினார்கள். பாசிசம், நாசிசம், ஜியோனிசம் ஆகியவற்றுடன் மிக நெருக்கமான தொடர்பை இந்துத்துவா பேசுகிற பார்ப்பனியம் வைத்துக் கொண்டே இருந்திருக்கிறது.

இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்ற மோடியுடைய ஆட்சி, பாசிசம் நாசிசம் கூறிய கொள்கைகளை நாடாளுமன்றம் வழியாக எப்படி செயல்படுத்தலாம் என்பதற்கான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டே இருக்கிறது.

நாடாளுமன்றம் என்ற அமைப்பைப் பயன்படுத்தி அதில் மெஜாரிட்டி பலம் கிடைத்தவுடன், தங்களுடைய பெரும்பான்மை எண்ணிக்கையை பயன்படுத்தி அவசர சட்டங்களைக் கொண்டு வந்து மாநிலங்களுடைய அடையாளங்களை முற்றாக அழித்து விடுவது, மாநிலங்கள் என்ற ஒன்றே இந்த நாட்டில் இருக்கக் கூடாது பெயரளவில் வேண்டுமானால் மாநிலங்கள் இருக்கலாம்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோவையில் கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம்



**கோவை :** கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி கோவை மாநகரக் கழகம் சார்பில் கோவை மாநகரப் பகுதிகளில் 10 தெருமுனைக் கூட்டங்களை நடத்தப்பட்டு அதன் நிறைவு பொதுக்கூட்டம் 4.11.2023 அன்று மாலை 5 மணியளவில் கோவை கவுண்டம்பாளையத்தில் நடைபெற்றது

பொதுக்கூட்டத்திற்கு தொடக்க நிகழ்வாக நிமிர்வு கலைக்குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து தோழர்கள் புரட்சிதமிழன், கிருஷ்ணன், தமிழினி பகுத்தறிவுப் பாடல்களை பாடினர்.

பின்னர் மாநகரச் செயலாளர் வெங்கடேசன் வரவேற்புரை வழங்கினார், சூலூர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திமுக வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் ஆகியோர் கலைஞர் பல்வேறு துறைகளில் நிகழ்த்திய சாதனைகள் குறித்து கருத்துரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர், திமுக மாநில மாணவரணித் தலைவர் இராஜீவ் காந்தி ஆகியோர் நிறைவாக சிறப்புரையாற்றினர்.

மாதவன் நன்றி உரையாற்றினார்.

## பால் பிரபாகரன் சிறப்புரை

# ஏர்வாடியில் சனாதன எதிர்ப்புக் கூட்டம்




நெல்லை : நெல்லை மாவட்டக் கழகம் சார்பில் வைக்கம் போராட்ட நூற்றாண்டை முன்னிட்டு எது சனாதனம்? எது திராவிடம்? விளக்கப் பொதுக்கூட்டம் ஏர்வாடியில் முதன்மை சாலையில் 05.11.2023 ஞாயிறு அன்று மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கழக நெல்லை மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன் தலைமை தாங்கினார், திராவிடர் இயக்க மூத்த முன்னோடி ஆசிரியர் ஜெயகாண்டீபன் முன்னிலை வகித்தார், கழக நெல்லை மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராசன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் நெல்லை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் ச.தமிழ்செல்வன், வி.சி.க. நாங்குநேரி தொகுதி செயலாளர் ஈழவளவன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சு.வெள்ளை பாண்டி, வி.சி.க. தென்மண்டல முன்னாள் செயலாளர் சொ.சு.தமிழினியன் ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார். சா.த.பிரபாகரன் நன்றி கூறினார்.

நிகழ்வில் தூத்துக்குடி மாவட்டப் பொருளாளர் சந்திரசேகர், தென்காசி மாவட்டத் தலைவர் அ.மாசிலாமணி, கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் ச.சுப்பையா, ஆசிரியர் கலாவதி, உமா, மஞ்சு, பூங்குன்றன், மனோஜ், ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா.உதயகுமார், நாங்குநேரி சுடர்மணி, அறிவழகன் மற்றும் தி.வி.க. தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

உண்டியல் மூலம் ரூ.1946/- நன்கொடை திரட்டப்பட்டது. இரவு உணவு மற்றும் கூட்ட ஏற்பாட்டை நெல்லை மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன் செய்திருந்தார்.

# சென்னையில் இரண்டாம் கட்டப் பயணம் எழுச்சி நடை

## நங்கவள்ளி கழகம் நடத்திய 24 தெருமுனைக் கூட்டங்கள்

**சென்னை :** சென்னையின் புறநகர் பகுதிகளில் இரண்டாம் கட்ட தெருமுனைக் கூட்டங்கள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

எது திராவிடம்? எது சனாதனம்? 117வது கூட்டம் 04.11.2023 மாலை 6 பொத்தேரி இரயில் நிலையம் எதிரிலும், 118வது கூட்டங்கள் இரவு 8 மணிக்கு மறைமலை நகரில் தொடங்கி நடைபெற்றது.

முன்னதாக உமாபதி - பொன்ராஜ் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது. கலை நிகழ்ச்சியை ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் தென்னவன், திராவிடர் கழகத் தோழர் திருக்குறள் வெங்கடேசன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், பெரியாரியலாளர் சமத்துவமணி, குகன், கல்லூரி மாணவர் ரகுநாத் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது பங்களிப்பாக ரூ.2410/- வழங்கினர். கூட்டத்தில் பங்கேற்ற தோழர்கள் சமத்துவமணி ரூ.500, பிச்சைமுத்து ரூ.100, கல்பாக்கம் முருகேசன் ரூ.1000, குகன் ரூ.500 என மொத்தம் ரூ.2100/- வழங்கி ஆதரவு தெரிவித்தனர்.

நிறைவாக தோழர்கள் அனைவருக்கும் பேராசிரியர் கனக விநாயகம் இரவு அசைவ உணவு ஏற்பாடு செய்தார்.

119வது கூட்டம் 06.11.2023 திங்கள் மாலை 6 மணிக்கு செம்மஞ்சேரியிலும், 120வது கூட்டம் இரவு 8 மணிக்கு சோழிங்கநல்லூர் கலைஞர் கருணாநிதி சாலையிலும் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் திமுக செம்மஞ்சேரி வட்ட செயலாளர் நாகராஜன், துணைச் செயலாளர் புஷ்பா, மாவட்ட பிரதிநிதி ஹரி, பகுதிப் பிரதிநிதி சேகர், முனுசாமி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

இராயப்பேட்டை அருண், அட்டி அருண், அஜித், செந்தில், வீரா, சூர்யா, ம. கி. எட்வின் பிரபாகரன், விஷ்ணு, குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேலம் :** நங்கவள்ளி ஒன்றிய கழகம் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டங்கள் 01.11.2023 புதன் அன்று தொளசம்பட்டி, அமரகுந்தி, முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர்.தோப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் பேராதரவுடன் நடைபெற்றது.

நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ. கிருஷ்ணன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் கருப்பூர் சக்திவேல், சேலம் மாவட்ட இளைஞரணி தலைவர் இளம்பிள்ளை தங்கதுரை, சிந்தாமணியூர் ரவி, சிந்தாமணியூர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் ஏற்காடு பெருமாள், நங்கவள்ளி சீ.அன்பு, சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், கே.ஆர்.தோப்பூர் கண்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினர். கே.ஆர்.தோப்பூர் அஜித்குமார் கூறினார். இதுவரை 24 கூட்டங்களை நிறைவு செய்துள்ளது நங்கவள்ளி ஒன்றிய கழகம்.

கூட்டத்தை நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 10, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran